பக்கங்கள் 17+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 02 வெள்ளிக்கிழமை 18.07.2024 | அதிர்வு 342


## போதைப்பொருள்களுடன் 3 ஆயிரத்து 283 பேர் கைது!



நாடளாவிய ரீதியில் ஜூலை மாதம் 11 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரையான காலப் 05


'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்


# கைதாகும் நிலையில் ராஜித முன் பிணை மனு நிராகரிப்பு



இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் தன்னைக் கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் தாக்கல் செய்யப்பட்ட முன் பிணை மனுவை நிராகரித்து கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி இன்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

மனு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிரிந்த மீன்பிடித் துறைமுகத்தில் மணல் அகழ்வும் திட்டத்தை 05

## நீதி அமைச்சர் ஹர்ஷன அதிரடி அறிவிப்பு

# வடக்கு மனிதப் புதைகுழிகள் பற்றி விரைவில் உண்மைகள் வெளிவரும்

### அரசு ஒருபோதும் தடையாக இருக்காது; குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்



வடக்கில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பில் விரைவில் உண்மைகள் வெளிவரும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"செம்மணி மனிதப் புதைகுழி உட்பட வடக்கில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பில் விரைவில் உண்மைகள் வெளிவரும். இதற்கு அரசு ஒருபோதும் தடையாக இருக்கமாட்டாது. 05

# செம்மணிப் புதைகுழிக்கு விரைவில் நீதி வேண்டும்!

## யாழில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்துக்கு துரித நீதி வேண்டும் என வலியுறுத்தி யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அகில இலங்கை மக்கள் 05

# ஹெரோயின் போதைப்பொருளுடன் யாழ்ப்பாணத்தில் மூவர் சிக்கினர்!

யாழ்ப்பாணத்தில் உயிர்கொல்லி போதைப்பொருளுடன் மூன்று இளைஞர்கள் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருநகர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய மூன்று இளைஞர்களைப் பொலிஸார் சோதனையிட்ட போது, அவர்களிடம் இருந்து 90 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளன. அதனையடுத்து மூவரையும் கைது செய்த பொலிஸார், அவர்களைக் குரு நகர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர்.







# பரதநாட்டிய அரங்கேற்றம்!

அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி இயக்குநர் "கலாசூரி" திவ்யா சுஜேனின் மாணவி, பத்மநாதன் பக்திக்குமரன் – திருமதி சுபாஜினி பக்திக்குமரன் தம்பதியரின் புதல்வி செல்வி ஸாருஸா பக்திக்குமரனின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஈழத்து ஆலயங்களை முதன்மைப் படுத்தியதாக "அறிவாகிய கோயிலிலே" என்னும் கருப்பொருளில் அமையும் இந்த அரங்கேற்றத்துக்கு மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கொள்ளுப் பேரன் உயர்திரு "ஞானபானு" கலாநிதி ராஜ்குமார் பாரதி முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். இந்திய இசைக் கலைஞர்கள் குரலிசை திருமதி வசுதா ரவி , வயலின் இசை சாய் ரக்ஷித், மிருதங்க இசை ராமநாதன் கார்த்திகேயன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக "இசைக் கலைமணி" திருமதி ராதை குமாரதாஸ், "இசைக்கலைமணி" திருமதி விஷ்ணுப் பிரியா ரட்ணகுமார் , எல். பி. அன்ரன் டயஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். ஸாருஸா கொழும்பு வெள்ளவத்தை சைவமங்கையர் கழக பாடசாலையின் பழைய மாணவரும் , தற்பொழுது பஹ் ரைன் AI நூர் சர்வதேச பாடசாலையின் மாணவியும் ஆவார்.

# நீரில் மூழ்கி சிறுவன் பலி



அம்பாந்தோட்டை – லுணுகம்வெஹெர நீர்த்தேக்கத்தில் நீராடிக் கொண்டிருந்த சிறுவன் நீரில் மூழ்கி உயி ரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக் கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் திஸ்ஸமஹராமை பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுவன் ஆவார்.

இந்தச் சிறுவன் மேலும் நான்கு சிறுவர்களுடன் இணைந்து லுணுகம்வெஹெர நீர்த்தேக்கத்தில் நீராடிக் கொண்டிருந்த போது திடீரென நீரில் மூழ்கியுள்ளார்.

இதனையடுத்து பிரதேசவாசிகள் இணைந்து சிறுவனைக் காப்பாற்றி லுணுகம்வெஹெர வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை லுணுகம்வெஹெர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தெஹிவளையில் துப்பாக்கிச்சூடு!

## ஒருவர் படுகாயம்

தெஹிவளை ரயில் நிலையத்துக்கு அருகில் இன்று வெள்ளிக்கிழமை காலை துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் இந்தத் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# கிழக்கு ஆளுநர் கொரிய தூதுவர் சந்திப்பு!

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் இலங்கைக் கான கொரிய தூதர் மியோன் லீ ஆகி யோருக்கும் இடையிலான சந்திப்பு இன்று வெள்ளிக்கிழமை (18) திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற் றது.

இந்த சந்திப்பின் போது மாகாணத் தில் மற்றும் குறிப்பாக திரு கோணமலை மாவட்டத்தில் உள்ள முதலீட்டு வாய்ப் புகள் தொடர்பாக விரிவான கலந்து ரையாடல் நடை பெற்றது. மாகாணத்தில் சுற்றுலா, இறால்வளர்ப்பு, விவசாய அபி விருத்தி மற்றும் உற்பத்தி தொழிற் சாலைகள் போன்ற துறைகளில் முதலீடுகளுக்கான ஏற்ற சூழல் காணப் படுவதாக ஆளுநர் தெரிவித்தார்.

மேலும், மாகாணத்தில் காணப்படும்



போதைப்பொருள் பிரச்சினை மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிலை ஆகியவற்றை பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

கொரிய தூதுவர் “கிளீன் ஸ்ரீலங்கா” திட்டத்தைப் பாராட்டி, அதன் சுற்றுச்சூழல் மற்றும் சமூக முக்கியத்துவத்தை வெளிப்படுத்தினார்.



# முன்னாள் அமைச்சர் சந்திரசேனவுக்கு ஆகஸ்ட் 1 வரை விளக்கமறியல் நீடிப்பு

முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேனவை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி இன்று வெள்ளிக்கிழமை காலை உத்தரவிட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



எஸ்.எம் சந்திரசேன, 2015 ஜனாதிபதித் தேர்தலின் போது தனது அன்புக்குரியவர்களுக்கு 25 மில்லியன் ரூபா பெறுமதியான சோளங்களை வழங்கியமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் கடந்த ஜூன் மாதம் 4 ஆம் திகதி காலை முன்னிலையாகியிருந்த போது இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உக்குளாங்குளத்தில் சீரற்ற மின் விநியோகம்

## செயலிழந்த பெறுமதியான மின் உபகரணங்கள்

**(கி.வசந்தன்)**

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் கடந்த 24 மணிநேரத்துக்கு மேலாக மின்சாரம் கூடிக் குறைந்து சீரற்ற வகையில் செல்வதால் பல இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டு மின்சாரப் பொருட்கள் செயலிழந்து நாசமாகியுள்ளன என்று அந்தப் குதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் நேற்றில் இருந்து மின்சார சபைக்குப் பல முறை தெரியப்படுத்தியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் வவுனியா, உக்குளாங்குளம் பகுதிக்கான மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது. அதன் பின் மின் குறைந்து, கூடி சீரற்ற நிலையில் கிடைத்துள்ளது.

சீரற்ற மின் விநியோகம் காரணமாக வீட்டு பாவனையில் இருந்து குளிரூட்டிகள், மின்விசிறிகள், மின் குமிழ்கள், மோட்டர்கள், சார்ஜர்கள் எனப் பல மின் உபரணங்கள் செயலிழந்துள்ளதுடன், இது தொர்பில் பலரும் மின்சார சபைக்குத் தெரியப் படுத்திய போதும் திருத்த வேலைக்கு வருவதாகக் கூறியுள்ளார்களே தவிர, 24 மணித்தியாலம் கடந்தும் திருத்தம் செய்யப்படவில்லை. இதனால் அப் பகுதி மக்களின் பல இலட்சம் பெறுமதியான மின் உபகரணப் பொருட்கள் செயலிழந்து, நட்டம் ஏற்பட்டுள்ளதுடன் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது.



# பாடசாலை மாணவியை கடத்திய காதலன் கைது!

15 வயதுடைய பாடசாலை மாணவியைக் கடத்தி அப்புத்தளைப் பகுதியில் வீடொன்றில் வைத்திருந்த இளைஞர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை இரவு லிந்துல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட மாணவி தலவாக்கலையில் உள்ள தோட்டமொன்றைச் சேர்ந்த தரம் 10 இல் கல்வி கற்பவர் ஆவார்.

இந்த மாணவி பேஸ்புக் மூலம் சந்தேகநபரான இளைஞருடன் காதல் வயப்பட்டுள்ளார். வீட்டை விட்டு வெளியேறி நானுஓயாவில் இளைஞரைச் சந்தித்து அவருடன் அப்புத்தளைக்கு ரயிலில் சென்றார் என்று விசாரணையில் மாணவி தெரிவித்துள்ளார்.

மாணவியின் தாயார் வெளிநாட்டில் வேலை செய்து வருவதாகவும், அவர் தந்தையின் பராமரிப்பில் வளர்ந்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மகளைக் காணவில்லை எனத் தந்தை லிந்துலை பொலிஸ் நிலையத்தில் அளித்த முறைப்பாட்டை அடுத்து, மாணவியின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## செம்மணிப்...








(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுச்சிக் கட்சியின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இதன்போது அந்தக் கட்சியின் செயலாளர் அருள் ஜெயந்திரன் ஊடகங் களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

"இன்று தமிழர் பிரதேசங்களில் மனிதப் புதைகுழிகள் அதிகளவில் கண்டுபிடிக்கப்பட்டு அகழப்பட்டு என்புக் கூடுகள் நூற்றுக்கணக்கில் மீட்கப்பட்டு வருகின்றன.

இவை அனைத்தும் காணாமல் ஆக்கப்பட எமது உறவுகளின் உடலங்களின் எச்சங்களாகவே இருக்கும் என எண்ணத் தோன்றுகின்றது.

ஆனாலும், அவை எவற்றுக்கும் இதுவரை நியாயமோ - பரிகாரங்களோ கிடைக்கவில்லை. மாறாக இழுத்தடிப்புகளும் மறைப்புகளுமே இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, இலங்கை 1948 இல் சுதந்திரம் பெற்றது. இதைப் பிரித்தானிய அரசு வழங்கிய காலத்திலேயே தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையே அரசியல் இழுபறி இருந்து வந்தது.

ஆனாலும், அதைப் பிரித்தானிய அரசோ அன்றி அன்றைய தமிழ்த் தலைவர்களோ கண்டுகொள்ளவில்லை.

அன்றைய தமிழ்த் தலைவர்களும் சிங்கள தேசம் வழங்கிய சலுகைகளுக்கு இசைவாகி கண்டுகொள்ளாதிருந்தனர்.

இந்நிலையில், இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலைக்கு உள்ளக விசாரணை ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாக இருக்கின்றது. அதேபோன்று சர்வதேச விசாரணையும் வலுவிழந்து கிடக்கின்றது.அதன்படி தமிழ் மக்களின் உரிமைசார் அரசியல் பிரச்சினைக்குப் பிரித்தானிய அரசுதான் தீர்வை வழங்க வேண்டும்." - என்றார்.

## போதைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிக்குள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருள்களுடன் 3 ஆயிரத்து 283 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹெரோயின் போதைப் பொருளுடன் 1006 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 1129 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 1039 பேரும், ஹேஷ் போதைப்பொருளுடன் 18 பேரும், கஞ்சா செடிகளுடன் 24 பேரும், போதை மாத்திரைகளுடன் 59 பேரும், சட்டவிரோத சிகரெட்டுகளுடன் 8 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## கைதாகும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரிய நிறுவனத்துக்கு ஒப்படைத்து அரசுக்கு 2.63 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக நட்டத்தை ஏற்படுத்தினார் எனக் கூறப்படும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனுவெல கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து தன்னைக் கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்பிணை மனு தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மனிதப் புதைகுழிகள் தொடர்பில் நீதிமன்றங்களில் இடம்பெறும் விசாரணைகளுக்கு அரசு முழுமையான ஒத்துழைப்பு வழங்கும். உண்மைகள் வெளிவந்து குற்ற வாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது." - என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலின் ஆலோசனை

இலங்கையின் ஏற்றுமதி பொருள்களுக்கு அமெரிக்கா மேலதிகமாக விதித்திருக்கும் முப்பது வீத வரி விவகாரத்தை ஒட்டி இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போது சுட்டிக் காட்டியுள்ள ஒரு விடயம் கவனிப்புக்குரியதாகின்றது.

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை வெளிநாடுகளுக்கான தனது கடப்பாடுகளை - கடன்களை - மீளச் செலுத்துவது தொடர்பாக சில ஆண்டுகால சலுகைகளை பெற்றிருக்கின்றது. இது தொடர்பில் இலங்கைக்கு கடன் வழங்குநர்கள் தொடர்பான உத்தியோகபூர்வ குழு உடன் *(Official Creditor Committee)* இலங்கை உடன்பாடுகளைச் செய்திருக்கின்றது. அந்த உடன்பாடுகளை செய்த கடன் வழங்குநர்கள் தொடர்பான உத்தியோகபூர்வ குழுவில் அமெரிக்காவும் ஓர் அங்கத்தவர் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டி இருக்கிறார்.

இலங்கை மீது அமெரிக்கா ஏற்றுமதி பொருள்களுக்குரிய திடீர் வரிகளை விதிப்பதன் மூலம், இலங்கை தன் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதை அமெரிக்கா கடினமாக்குகின்றது. இதன் மூலம் இலங்கையுடன் தான் செய்து கொண்ட அதிகாரப்பூர்வ கடன் வழங்குநர்கள் குழுவின் ஒப்பந்தத்தை அமெரிக்கா ஒரு தலைப் படசமாக மீறுகின்றது என்ற சாரப்பட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டி இருக்கிறார்.

அதாவது, இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களுக்கு கண்மூடித்தனமான வரி விதிப்பதன் மூலம், இலங்கையைப் பொருளாதார நெருக்கடிக்குள் மேலும் ஆழ்த்தி, அதன் காரணமாக கடன் மீளளிப்புத் தொடர்பாக இலங்கையுடன் தான் ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தத்தை ஒருதலைப் பட்சமாக அமெரிக்கா மீறுகிறது. இதனை அமெரிக்காவுக்குச் சுட்டிக் காட்டி இந்த வரி விதிப்பைக் குறைக்குமாறு அமெரிக்காவுக்கு அழுத்தம் தர வேண்டும் என்கிறார் ரணில் விக்கிரமசிங்க.

‘‘அமெரிக்காவுடன் கலந்துரையாடி இந்த முப்பது சதவீத வரியை குறைத்துக்கொள்ள முடியாவிட்டால், அமெரிக்கா எமது ஒப்பந்தத்தை மீறியுள்ளதாகவே கருத்தப்படும். எவ்வாறு இருந்தாலும் இந்த முப்பது சதவீத விரியை நாங்கள் குறைத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அது எது பொருளாதாரத்துக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

‘‘இலங்கை, அதன் சர்வதேச பிணைமுறி வைத்திருப்பவர்களுக்கு அதன் கடன்களைத் தீர்க்க வேண்டும் என்று வொஷிங்டன் விரும்புகிறது. இருப்பினும், நமது பொருளாதாரம் சரிந்தால் இது சாத்தியமில்லை. எனவே, அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள முப்பது சதவீத வரி தொடர்பில் அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகளின் போது இந்தக் கருத்தை எழுப்ப வேண்டும்.

‘‘பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பை செயல்படுத்த அமெரிக்கா ஏற்கனவே இலங்கையை வலியுறுத்தியுள்ளது. ஆகவே இந்தப் பிரச்சினை அந்தப் பரந்த உரையாடலின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்.’’ - என்று ரணில் வற்புறுத்துகின்றார்.

இலங்கை ஆட்சித் தரப்பு இந்த ஆலோசனைகளை உள்வாங்கி, அதனடிப்படையில் செயல்பட முன்வர வேண்டும். ஏனெனில் இது காலத்தின் கட்டாயமாகும்.



# பாடசாலைகளுக்குத் தேவையான வளங்களை பகிர்வதற்கு வலய பணிப்பாளர்களே பொறுப்பு!

## வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவிப்பு

சில பாடசாலைகளில் வளங்கள் குவிந்துள்ளன. அதற்கு அருகிலுள்ள பாடசாலைகளில் எந்தவொரு வளங்களும் இல்லாமல் உள்ளன. வளங்கள் சமச்சீராகப் பகிரப்படுவதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களே பொறுப்பு.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன்.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்தக் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (15) நடைபெற்றது.

இதன்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த ஆண்டுக்குரிய வேலைத் திட்டங்களை இன்னும் ஒரு மாத காலத்துக்குள் வழங்குமாறும் பணிப்புரை விடுத்தார்.

ஆசிரிய இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்களை புதன்கிழமையுடன் (16) விடுவித்து புதிய நிலையங்களில் பொறுப்பேற்க, வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பணிக்க வேண்டும்.

அவர்கள் புதிய நிலையங்களில் அறிக்கையிடவில்லையாயின் நிறுவன நடைமுறைகளுக்கு அமைவான நடவடிக்கையை உடனடியாக எடுக்கப்பட வேண்டும்.– என்றார்.

மேலும், பாடசாலைகளில் நடைபெறும் தவணைப் பரீட்சைக்கான கட்டணங்களை மாணவர்களிடமிருந்து அறவிடுவதில்லை. அதற்குரிய நிதி மாகாண சபையால் வழங்கப்படும் என்று இதன்போது வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் தெரிவித்தார். பரீட்சை வினாத்தாள் திருத்துவதற்கு கொடுப்பனவு வழங்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளில் வடக்கு மாகாணம் தொடர்ந்தும் பின்தங்கியுள்ள நிலைமை தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது. கல்விப் பொதுத்தராதர உயர் தரப் பரீட்சையில் முன்னிலையில் இருந்தாலும், சாதாரண தரப் பரீட்சையில் முன்னேற்றத்தைக் காண்பிக்க முடியாமைக்கான காரணங்கள் விரிவாக ஆராயப்பட வேண்டும் என ஆளுநர் குறிப்பிட்டார்.

சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு புறக்காரணிகளால் அவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. மாணவர்களுக்கான உளவள ஆற்றுப்படுத்தல் அவசியம் என்று இதன்போது வலயக் கல்விப் பணிப்பாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேநேரம், ஆசிரியர்களிடமிருந்து உணர்வுபூர்மான கற்பித்தல் செயற்பாடுகள் இன்னமும் அதிகமாகத் தேவை எனவும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சு, கல்வித் திணைக்களம், விளையாட்டுத் திணைக்களம், கலாசார அலுவல்கள் பிரிவு என ஒவ்வொரு திணைக்களத்தினதும் முன்னேற்றம் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலளர், பிரதிப் பிரதம செயலாளர் நிதி, திட்டமிடல், கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.









# தற்காலிக வீடு அமைப்பதற்கு சந்நிதியான் ஆச்சிரமம் உதவி!

மன்னார் – பெரியமடு, காயாநகர் கிராமத்தில் பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்குத் குடியிருப்புக்காக தற்காலிக வீடு அமைப்பதற்கு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிமத்தால் 2 லட்சத்துப் 10 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரம சுவாமி தன்மானத் தமிழன், அமுதகலாசுரபி, செ. மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்கள் சகிதம் நேற்று முன்தினம் புதன்கிழமை அக்கிராமத்துக்கு சென்று பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு உதவி வழங்கினார்.





# சாய்ந்தமருது பிரதான தபாலகத்தின் அருகாமையில் உள்ள வீதி புனரமைப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது – 07 ஆம் பிரிவில் பெரிய தபாலகத்துக்கு அருகாமையில் உள்ள வீதிக்கு கொங்கிரீட் இட்டு புனரமைப்பு செய்யும் பணி நேற்று முன்தினம் (17) வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

அரசின் பி.எஸ்.டி.பி. திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது பிரதேச மக்களின் நீண்ட நாள் கோரிக்கையில் ஒன்றான தபாலகத்துக்கு அருகாமையில் உள்ள வீதி நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவாவின் வேண்டுகோளின் பெயரில் இரண்டு மில்லியன் ரூபா செலவில் முழுமையாகச் செப்பனிடும் பணி நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. ஆதம்பாவாவின் இணைப்புச் செயலாளர் ஆசிரியர் எஸ். எம். ஆரிப் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்தச் செப்பனிடும் பணியில் தொழிநுட்ப உதவியாளர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினருடைய அலுவலக உத்தியோகத்தர்கள், தேசிய மக்கள் சக்தியின் செயற்பட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.







# சிவபூமி திருவாசக அரண்மனையில் திருவாசக அரங்கத்தின் திறப்பு விழா!

நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையில் அமைக்கப்பட்டுள்ள சிவபூமி திருவாசக அரங்கத்தின் திறப்பு விழா திங்கட்கிழமை (14) வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் பங்கேற்புடன் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் இந்த அரங்கத்துக்கான அனுசரணை வழங்கிய ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் வை.மனோமோகன் – சிவகௌரி தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர்,

ஆன்மீக நிறுவனங்கள் சமூகப் பணியையும் செய்யலாம் என்பதற்கு முன்மாதிரியாக திகழந்தது தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன் ஆலயமே. அதனைத் தொடக்கியவர் தங்கம்மா அப்பாக்குட்டி. அவரால் கண்டெடுக்கப்பட்ட முத்துதான் கலாநிதி ஆறு.திருமுருகன்.

இன்று ஆலயங்களில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. தினமும் ஆலயப் பிரச்சினைக்காக என்னிடம் வருகின்றார்கள். ஒவ்வொரு ஆலயங்களிலும் ஒவ்வொரு விதமான பிரச்சினை. கடவுளை விடவும் தாங்கள் பெரியவர்கள் என்ற எண்ணம் மேலோங்குவதால்தான் இந்தப் பிரச்சினைகள் எழுகின்றன என நான் நினைக்கின்றேன். அவர்கள் ஆலய வழக்குகளுக்காக செலவு செய்யும் பணத்தை மக்கள் நலனுக்காக செலவு செய்தால் எவ்வளவோ நன்மைகள் கிடைக்கும்.

இந்து மதம் இன்று பிறசூழ்நிலைக் காரணிகளால் பல்வேறு அழுத்தங்களை எதிர்கொண்டு வருகின்றது. அதைத் தாண்டிச் செல்வதற்கு பெரும்பாடுபட வேண்டியநிலைமை காணப்படுகின்றது.

நல்லது செய்ய முனையும்போது இடர்கள் வரத்தான் செய்யும். அதையும் தாண்டித்தான் ஆறு. திருமுருகன் பணி செய்கிறார். மக்களிடத்திலேயே நம்பிக்கையைப் பெற்றவர்கள் மிகக் குறைவு. ஆனால் ஆறு. திருமுருகன் வெளிப்படைத் தன்மையுடன் செயலாற்றுவதால்தான் அவர் மீது மக்கள் நம்பிக்கை வைத்து இந்தச் செயற்றிட்டங்களுக்கு உதவிகளை வழங்குகின்றார்கள்.

இப்போதைய காலத்தில் உதவி செய்வதற்கு மனம் வருவதே அரிது. ஆனால் மருத்துவ நிபுணர் வை. மனோமோகன் தம்பதியர் வழங்கிவரும் உதவிகள் என்றும் போற்றுதலுக்குரியன.– என்றார்.



















# திருக்கேதீஸ்வரம் கௌரியம்பாள் வித்தியாலய ஆடிப்பிறப்பு நிகழ்வு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையுடன் மன்னார் மாவட்ட செயலகத்தால் வருடாந்தம் நடத்தப்படும் மன்னார் மாவட்ட மட்டத்திலான ஆடிப்பிறப்பு விழா நிகழ்வுகள் நேற்று மன்னார் திருக்கேதீஸ்வரம் கௌரியம்பாள் தமிழ் மகா வித்தியா லயத்தில் இடம் பெற்றது.

ஆடிப்பிறப்பு கொண்டாட்டம் சமூகமயப்பட்ட நிகழ்வுகளாக நடத்தப்பட வேண்டும் என்ற சிந்தனைக்கு அமைவாக மன்னார் கௌரியம்பாள் தமிழ் மகா வித்தியாலய அதிபர் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் இணைந்து இம்முறை ஆடிப்பிறப்பு கொண்டாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மன்னார் மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் பு.டிலிசன் பயஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ஆடிப்பிறப்பு விழாவின் தந்தை எனச் சிறப்பிக்கப்படும் யாழ்ப்பாணம் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் உருவப்படத்துக்கு மன்னார் அரச அதிபர் க.கனகேஸ்வரன் மாலை அணிவித்தார்.

தொடர்ந்து உருவப்படத்துக்கு ஆசிரியர்கள், மாணவர்கள் மலர் வணக்கம் செலுத்தினர். நிகழ்வில் மன்னார் கௌரியம்பாள் தமிழ் மகா வித்தியாலய அதிபர் த.கோகுலராஜா வரவேற்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. ஆடிப்பிறப்பு பற்றிய சிறப்பு சொற்பொழிவைப் பாடசாலை ஆசிரியை செல்வி மு.கனகதுர்க்கா நிகழ்த்தினார்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.











# சிறு தேயிலை உற்பத்தி கிராமங்களை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை!

## தேயிலையின் தரத்தை மேம்படுத்தவும் திட்டம்

(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)

தேசிய மக்கள் சக்தி அரசின் கீழ் ஐந்நூறு சிறு தேயிலை உற்பத்தி கிராமங்கள் உருவாக்கப்படும் என்று தெரிவித்த பெருந்தோட்ட மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்தியாரத்ன, தேயிலையின் தரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இரத்தினபுரி பிரதேச செயலகத்தில் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள சிறு தேயிலை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் அமைச்சர் சமந்த வித்தியாரத்னவுடன் தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

கடந்த காலங்களில் தேயிலை தொழிற்துறையை முன்னேற்றுவதாக குறிப்பிட்டு சர்வதேச நாடுகளில் விளம்பரங்கள் வெளியிடுவதற்காக மாத்திரம் 1965 இலட்சம் ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளது.

உலக வங்கியிடம் மாத்திரம் 48.9 மில்லியன் டொலர்கள் பெறப்பட்டுள்ளன. இதில் 60 வேலைத் திட்டங்கள் தோல்வியடைந்துள்ளன. இந்த திட்டங்களுக்காக, முன்னாள் அமைச்சர் தயா கமகேவின் மனைவி, லக்ஷ்மன் செனவிரத்னவின் மகன் மற்றும் சாலிய திசாநாயக்கவின் மனைவி ஆகியோரே பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர். இந்த விவகாரம் தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தரமான தேயிலையை உற்பத்தி செய்யும் விதம், தேயிலை உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பில் உரையாற்றிய அமைச்சர், இலங்கை தேயிலை நாமத்தை உயர்நிலைக்கு கொண்டு செல்வதற்காக அனைவரும் இணைந்து செயற்படுவோம் என்றும் அழைப்பு விடுத்தார்.

சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து இலங்கை தேயிலை சபை ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனக சேனாரத்ன, இரத்தினபுரி பிரதேச செயலாளர் கே.எஸ். நிசாந்த ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# விசேட தேவையுடையோருக்கு கனடா நாட்டின் ஊடாக உதவி

(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)

கொட்டகலை பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஏற்பாட்டில் கொட்டகலை பிரதேச பகுதியில் உள்ள விசேட தேவையுடை குழந்தைகளுக்கான புதிய வேலைத் திட்டம் ஒன்று நேற்று வியாழக்கிழமை கொட்டகலை ரிசி கேசி கலாச்சார மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த வேலைத் திட்டம் கனடா நாட்டின் ஓட்டிசம் ஸ்பிக்ஸ் நிறுவனத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டது.

கொட்டகலை பிரதேசத்தில் உள்ள விசேட தேவையுடையவர்களை எவ்வாறு பாதுகாப்பது தொடர்பாகப் பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோ கத்தர்களுக்குத் தெளிவு



படுத்தப்பட்டது.

இதேவேளை, இன்று இடம்பெற்ற தெளிவூட்டல் நிகழ்வில் விசேட தேவையுடைய சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.




# 9 வயது இராகலை மாணவி புதிய உலக சாதனை படைப்பு!

**(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )**

தரம் 4 இல் படிக்கும் 9 வயது இராகலை பாடசாலை மாணவி ஒரு புதிய உலக சாதனையைப் படைத்துள்ளார்.

தனிம வரிசை அட்டவணையில் உள்ள 118 தனிமங்களின் பெயர்கள், மனித உடலின் உள் உறுப்புகள் பலவற்றின் பெயர்களையும் ஆங்கிலத்திலும் தமிழிலும் மிகவும் குறைந்த நேரத்தில் கூறி சோழன் உலக சாதனை படைக்க மாணவி சங்கரதாஸ் கண்சிகா முயற்சித்துள்ளார்.

நுவரேலியா மாவட்டம் கந்தப்பொல ரிலாமுல்ல அருணோதயா தொடக்கப் பள்ளியில் 04 ஆம் ஆண்டில் கல்வி கற்று வரும் மாணவி சங்கரதாஸ் கன்சிகா தனிம வரிசை அட்டவணையில் உள்ள 118 தனிமங்களின் பெயர்களை 24 நொடிகளில் கூறிய அதேவேளை, மனித உடலின் உள் உறுப்புகள் 168 இன் பெயர்களை தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் 04 நிமிடங்களில் கூறினார்.



இவரது இந்த முயற்சியானது சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீநாக வாணி ராஜா மற்றும் கண்டி மாவட்டத் துணைத் தலைவர் சந்திரமோகன் முன்னிலையில் நடைபெற்றது.

மாணவியின் முயற்சியை மிகவும் உன்னிப்பாக கண்காணித்த நடுவர்கள் அதை உலக சாதனையாக அங்கீகரித்தார்கள்.

சோழன் உலக சாதனை படைத்த மாணவி கன்சிகாசுக்குச் சட்டகம் செய்யப்பட்ட சான்றிதழ், பதக்கம், பேட்ச் மற்றும் பைல் போன்றவை நடுவர்கள் மற்றும் முதன்மை விருந்தினரான வலயக் கல்வி அலுவலக இயக்குநர் திருமதி டி.எம்.எம்.பி.திசாநாயக பாடசாலையின் தலைமை ஆசிரியர் வீரமலை விஜேந்திரன் போன்றோரால் வழங்கப்பட்டன.

சோழன் உலக சாதனை படைத்த மாணவியை வலயக் கல்வி அலுவலக இயக்குநரும் மற்றும் பாடசாலையின் தலைமை ஆசிரியரும் வாழ்த்திச் சிறப்புரையாற்றினார்கள்.

சோழன் உலக சாதனை படைத்த மாணவியை சிறப்பு விருந்தினர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் வாழ்த்திப் பாராட்டினார்கள்.



# பூசணிக்காய் தோட்டத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழப்பு!




(பாறுக் ஷிஹான்)

அம்பாறை உஹன கலஹிடியாகொட கிராமத்தில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அம்பாறை உஹன பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கலஹிடியாகொட கிராமத்தில் உள்ள பூசணிக்காய் தோட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சார கம்பியில் சிக்கியே உயிரிழந்துள்ளார் என்று ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் கடந்த புதன்கிழமை (16) இரவு இடம் பெற்றுள்ளது. மின்சாரம் தாக்கிய நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பின்னர் உஹன பொலிஸ் நிலைய அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்து பூசணிக்காய் பயிரிடப்பட்ட நிலத்துக்குச் சட்டவிரோதமாக மின்சாரம் இணைத்த நபரை கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் மின்சாரம் தாக்கி இறந்தவர் கலஹிடியாகொட கிராமத்தைச் சேர்ந்த கெலும் நமல் என்பவராவார்.

சம்பவம் தொடர்பில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் உத்தரவின் பேரில் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சுஜித் வேதமுல்லவின் அறிவுறுத்தலின் பேரில் அம்பாறை பிரதேச உகன பதில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் தலைமையில் உஹன பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பிற அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# ‘நம்பிக்கையின் சிறகுகள்’ புத்தக வெளியீட்டு விழா!

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பேசாலையைச் சேர்ந்த வரும் மன்னார் சென்.பற்றிமா மகா வித்தியாலய பழைய மாணவியும் தகவல் தொடர்பாடல் பட்டத்தாரியுமான செல்வி டிவன்சி மாக்கஸின் ‘நம்பிக்கையின் சிறகுகள்’ அதாவது ‘விங்கிஸ் ஒவ் ஹோப்’ என்ற ஆங்கில கவிதை தொகுப்பின் நான்காவது புத்தக வெளியீட்டு விழா பேசாலை சென். பற்றிமா மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

சென்.பற்றிமா மகா வித்தியாலய பிரதி அதிபர் அருட்தந்தை ரி.அன்சன் றெஜிகுமார் அடிகளார் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக மன்னார் நகர் பிரதேச செயலாளர் எம். பிரதீப், கௌரவ விருந்தினர்களாக கொழும்பு சென். அந்தனிஸ் றோமன் கத்தோலிக்க ஆண்கள் கல்லூரி பிரதி அதிபர் அருட்பணி ஏ.வி.அல்விரட் அடிகளார் , வவுனியா றம்பைக்குளம் பெண்கள் மகா வித்தியாலய ஆரம்ப பிரிவு வகுப்புக்களின் பொறுப்பாளருமான அருட்சகோதரி துஸ்யந்தி செல்வநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பேசாலை வைத்தியசாலை அதிகாரி துர்சிக்கா தேவராஜா சில்வா , மன்னார் சட்டத்தரணி புராதினி சிவலிங்கம் , வவுனியா பல்கலைக்கழக ஆங்கில ஆசிரியர் ஏ.செபராஜா மற்றும் அக்கடமிக் ஒருங்கிணைப்பாளர் ஆர்.ஜே. மோகன் குரூஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண் டனர்.

புத்தக எழுத்தார் செல்வி டிவன்சி மாக்கஸ், இந்தப் புத்தகத்தை சென். பற்றிமா மகா வித்தியாலய பிரதி அதிபர் அருட்தந்தை ரி.அன்சன் றெஜிகுமார் அடிகளாரிடம் கையளிக்க அவர் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மன்னார் நகர் பிரதேச செயலாளர் எம்.பிரதீப்பிடம் வழங்கி புத்தக வெளியீட்டை செய்து வைத்தார்.







# விமான விபத்து குறித்த இறுதி அறிக்கை வரும் வரை நிதானம் காக்குமாறு விசாரணை அமைப்பு கோரிக்கை

விமான விபத்து குறித்த இறுதி அறிக்கை வரும் வரை நிதானம் காக்குமாறு பொதுமக்கள் மற்றும் ஊடகங்களுக்கு விமான விபத்துக் கான விசாரணை அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

அமெரிக்காவின் வால் ஸ்ட்ரீட் ஜர்னல் வெளியிட்ட செய்திக்கு ஏ.ஏ.ஐ.பி. எதிர்வினையாற்றியுள்ளது.

இது தொடர்பாக விமான விபத்துக் கான விசாரணை அமைப்பு (ஏ.ஏ.ஐ.பி) வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"அகமதாபாத் விமான விபத்து தொடர்பாக சட்ட விதிகளுக்கு உட்பட்டு தனது விசாரணையை விமான விபத் துக்கான விசாரணை அமைப்பு மேற் கொண்டு வருகிறது. இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்ட 2012 இல் இருந்து 92 விபத்துக்கள் மற்றும் 111 கடுமையான சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தி உள்ளது. இதன்மூலம் ஏ.ஏ.ஐ.பி. குறைபாடற்ற சாதனையை படைத் துள்ளது.

இதேபோல், சமீபத்திய விமான விபத்துக்களில் மிகவும் மோசமானதான அகமதாபாத் விமான விபத்து குறித் தும் ஏ.ஏ.ஐ.பி, விதிகளுக்கு உட்பட்டும் சர்வதேச நெறிமுறைகளுக்கு ஏற்பவும் தொழில்முறை விசாரணையை மேற்கொண்டு வருகிறது.

இந்த விமான விபத்து பொதுமக் களிடையே கடும் அதிர்ச்சியை ஏற் படுத்தி இருந்தாலும், இந்திய விமானத் துறையின் பாதுகாப்பு முறைக்கு எதிராக பொதுமக்களின் கவலையை அல்லது



கோபத்தைத் தூண்டுவதற்கான நேரம் இதுவல்ல. குறிப்பாக, உண்மையற்ற கருத்துகளின் அடிப்படையில் இத்த கைய செயல்களில் ஈடுபடுவது ஏற்கத் தக்கதல்ல.

இந்த விமான விபத்தில் உயிரிழந்த பயணிகள், விமானப் பணியாளர்கள் உள்ளிட்டோரின் குடும்ப உறுப்பி னர்கள் எதிர்கொள்ளும் வேதனையை உணர்ந்து செயல்பட வேண்டியது மிகவும் முக்கியம். உண்மையற்ற கருத்துகளை தெரிவிப்பதன் மூலம் சில சர்வதேச ஊடகங்கள், மீண்டும் மீண்டும் முடிவுகளை எடுக்க முயல் கின்றன என்பது எங்கள் கவனத் துக்கு வந்துள்ளது.விசாரணை நடை பெற்றுக் கொண்டிருக்கும் இந்த தரு ணத்தில், இத்தகைய செயல்கள் பொறுப்பற்றவை.

முன்கூட்டிய முடிவுகளின் அடிப் படையில் கதைகளை உருவாக்குவது புலனாய்வு செயல்முறையை குறை மதிப்புக்கு உட்படுத்தும் என்பதால், இதை தவிர்க்குமாறு பொதுமக்க ளையும் ஊடகங்களையும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

ஏ.ஏ.ஐ.பியின் முதற்கட்ட அறிக்கை என்பது என்ன நடந்தது என்பது பற்றிய தகவல்களை அளிப்பதற்காக மட்டுமே. முதற்கட்ட அறிக்கையை இப்படித் தான் எடுத்துக்கொள்ள வேண்டும். தற்போதைய நிலையில், திட்டவட்டமான முடிவுக்கு வருவது சரியல்ல. ஏஏஐபி யின் விசாரணை இன்னும் நிறைவடைய வில்லை. விபத்துக்கான காரணம் என்ன, இதுபோன்ற விபத்து மீண்டும் நிகழாமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பான இறுதி அறிக்கை விரைவில் வெளிவரும்.

எனவே, விசாரணை முழுமையாக நிறைவடைந்து இறுதி அறிக்கை வரும் வரை காத்திருக்குமாறு ஏ.ஏ.ஐ.பி. அனைத்து தரப்பினருக்கும் வேண்டு கோள் விடுக்கிறது. தொழில்நுட்பம் சார்ந்தும், பொதுமக்களின் நலன் சார்ந்தும் வெளியிட வேண்டியவை இருப்பின் அவற்றை ஏஏஐபி வெளி யிடும்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமான விபத்துக்கு எரிபொருள் சப்ளை குறைந்ததே காரணம் என்றும் எரிபொருள் சப்ளை குறைந்ததற்கு, அதற்கான சுவிட்ச் ஆஃப் மோடில் இருந்ததே காரணம் என்றும் முதற்கட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதை சுட்டிக்காட்டி, விமானிதான் கவனக்குறைவாக சுவிட்சை ஆஃப் செய்திருப்பார் என அமெரிக்காவின் வால் ஸ்ட்ரீட் ஜர்னல் செய்தி வெளியிட்ட நிலையில், ஏஏஐபி இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

# நடிகை ரன்யா ராவுக்கு ஓராண்டு சிறை தண்டனை



தங்க கடத்தல் வழக்கில் நடிகை ரன்யா ராவுக்கு பிணையில் வெளியே வர முடியாத, ஓராண்டு சிறை தண் டனை விதித்து பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கர்நாடக பொலிஸ் டி.ஜி.பி. ராம சந்திர ராவின் வளர்ப்பு மகளும், நடிகையுமான ரன்யா ராவ் (வயது 32) டுபாயில் இருந்து 14.8 கிலோ தங்கம் கடத்தி வந்ததாக கடந்த மார்ச்சில் பெங்களூர் சர்வதேச வி- மான நிலையத்தில் கைது செய்யப்பட் டார்.

அவரது வீட்டில் நடத்திய சோத னையில் 2.8 கோடி இந்திய ரூபா மதிப்பிலான தங்கமும், 2.4 கோடி இந்திய ரூபா ரொக்கமும் சிக்கின. வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள், அவர் மீது சட்டவிரோத தங்க கடத்தல் மற்றும் அந்நிய செலா வணி மோசடி ஆகிய சட்டப்பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்தனர். இவ்வழக்கு பெங்களூருவில் உள்ள பொருளா தார குற்றங்களுக்கான சிறப்பு நீதிமன் றத்தில் நடைபெற்று வந்தது.

இந்நிலையில் நீதிமன்றம், தங்க கடத்தல் வழக்கில் ரன்யா ராவ் மீதான குற்றச்சாட்டுகள் வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள் தரப்பில் ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டுள்ளன. எனவே அவருக்கு சட்டவிரோத தங்க கடத்தல் மற்றும் அந்நிய செலாவணி மோசடி ஆகிய சட்டப்பிரிவுகளின்கீழ் ஓராண்டு சிறை தண்டனை விதிக்கப் படுகிறது என்று உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரி ஒருவர் கூறு கையில்,

"இந்த பிரிவின்கீழ் தண்டிக்கப் பட்டுள்ளதால் ரன்யா ராவ் ஓராண்டுக்கு பிணையில் வெளியே வர முடியாது." என தெரிவித்தார்.

ரன்யா ராவ் தரப்பில், இந்த தீர்ப்பை எதிர்த்து கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# இந்திய - அமெரிக்க உறவு மேலும் வலுவடைகின்றது



இந்தியாவும் அமெரிக்காவும் வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை இறுதி செய்யும் நிலை யில் உள்ளதாக அமெரிக்க ஜனாதி பதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இருதரப்பினருக்கும் இடையேயான உயர் மட்ட பேச்சுவார்த்தைகள் தொடர் வதனை சுட்டிக்காட்டி அவர் இதனைக் கூறியுள்ளார்.

முன்னதாக , இந்த மாத ஆரம்பத் தில், இந்திய அதிகாரிகள் குழு அமெரிக்கா வுடனான பேச்சுவார்த்தைக்காக வொஷிங் டன் சென்றிருந்தது.

இரு தரப்பினரும் பல மாதங்களாகப் பேச்சுவார்த்தை நடத்தி வரும் நிலையில், குறிப்பாக விவசாய அணுகல், வாகன உதி ரிப்பாகங்கள் மீதான வரிகளில் சிக்கல் நிலவியமை குறிப்பிடத்தக்கது.




# மழை, வெள்ள பாதிப்புகளால் பாகிஸ்தானில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 150 ஆக உயர்வு

பாகிஸ்தானில் மழை, வெள்ள பாதிப்புகளால் கடந்த 3 வாரங்களில் 150 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானில் பஞ்சாப், கைபர் பக்துன்வா, ஜில்ஜிட்-பால்டிஸ்தான் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த சில வாரங்களாக கனமழை பெய்து வருகிறது.

தலைநகர் இஸ்லாமாபாத், இராணுவ தலைமையகமான ராவல்பிண்டி உட்பட பல்வேறு நகரங்கள், கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன.ஜீலம், சிந்து, சட்லஜ், ஜில்ஜிட், ஸ்வாட் உள்ளிட்ட நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. கனமழை காரணமாக பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் முழுவதும் அவசர நிலை அமுல் செய்யப்பட்டு இருக்கிறது.

இதுகுறித்து பாகிஸ்தான் பேரிடர் மீட்பு துறையின் செய்தித் தொடர்பாளர் பரூக் அகமது கூறும்போது,

"கனமழை காரணமாக பாகிஸ்தான் முழுவதும் பேரழிவு ஏற்பட்டிருக்கிறது. பல்வேறு கிராமங்கள், நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. மழை, வெள்ள பாதிப்புகளால் கடந்த புதன் கிழமை மட்டும் 30 பேர் உயிரிழந்தனர். கடந்த 3 வாரங்களில் 150 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். சுமார் 300 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்து உள்ளனர். ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டு இருந்த பயிர்கள் நாசமாகி உள்ளன." என்று தெரிவித்தார்.

சர்வதேச சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவிக்கையில்,

"பருவநிலை மாறுபாட்டால் பாகிஸ்தான் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு உள்ளது. கடந்த 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருமழையின்போது பாகிஸ்தானில் 2,000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 40 பில்லியன் டொலர் அளவுக்கு இழப்பு ஏற்பட்டது. தற்போதும் அதுபோன்ற சூழல் உருவாகி வருகிறது. பாகிஸ்தான் முழுவதும் 13,000 மலைச் சிகரங்கள் உள்ளன. பருவநிலை மாறுபாட்டால் அவற்றின் பனி உருகி பெரு வெள்ளத்தை ஏற்படுத்தி வருகின்றன.

பாகிஸ்தானின் பொருளாதாரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டு இருக்கிறது. அந்த நாட்டு மக்கள் தொகையில் 50 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் குடிசை வீடுகளில் வசிக்கின்றனர். இதன் காரணமாக இயற்கை பேரிடரின்போது பெரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. பருவநிலை மாறுபாட்டை சமாளிக்க பாகிஸ்தான் அரசு போதிய நடவடிக்கைகளை எடுத்தால் மட்டுமே வெள்ள பாதிப்புகளில் இருந்து மக்களை காப்பாற்ற முடியும்."- என்று தெரிவித்துள்ளனர்.

# சிரியா ஒருபோதும் போருக்கு அஞ்சாது

## ஜனாதிபதி அல்-ஷாரா தெரிவிப்பு

தாம் ஒருபோதும் போருக்கு அஞ்சுவதில்லை என சிரிய ஜனாதிபதி அல்-ஷாரா தெரிவித்துள்ளார்.

சிரிய இராணுவ தலைமையகத்தை இஸ்ரேல் தாக்கியதையடுத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிரிய மக்களின் கண்ணியத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் போராடத் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களை குறி வைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் சிரிய ஜனாதிபதி அல்-ஷாரா தெரிவித்தார்.



# கனடா முரசு

வெள்ளிக்கிழமை 18/07/2025

## கனடாவில் ஆற்றில் விழுந்த இந்திய இளைஞர் உயிரிழப்பு



C2 ▶




# பெண் ஒருவர் குத்திக் கொலை

டொரொன்டோ நோர்த் யார்க் பகுதியில் வியாழக்கிழமை காலை பெண் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்த சம்பவம் காலை 9:30 மணிஅளவில்,பார்க்வேஃபாரஸ்ட் டிரைவ் மற்றும் ஷெப்பர்டு அவென்யூ ஈஸ்ட் அருகே உள்ள ஒரு வர்த்தக மையத்தின் வாகனத் தரிப்பிட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த நிலையில் அந்தப் பெண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஆனால், அவர் அங்கு உயிரிழந்துள்ளார் என மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்.

இந்நிலையில், தாக்குதலுக்குப் பிறகும் எந்த சந்தேக நபரின் விவரங்களும் இதுவரை வெளியிடப்படவில்லை.

உயிரிழந்த பெண்ணின் அடையாளம் இதுவரை உறுதியாகக் குறிப்பிடப்படவில்லை. பொலிஸார் தற்போது இந்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணை நடத்தி வருகின்றது.

# சொகுசு வீட்டை விற்கிறார் சர்ச்சைக்குரிய எழுத்தாளர்

அமெரிக்காவில் குடிபெயரத் தயாராகும்போது கனேடிய எழுத்தாளர் ஜோர்டான் பீட்டர்சன் தனது சொகுசு வீட்டை சந்தையில் வைக்கிறார்.

சர்ச்சைக்குரிய கனேடிய எழுத்தாளரான ஜோர்டான் பீட்டர்சன் அமெரிக்காவிற்கு இடமாற்றம் செய்ய உள்ளார்.


இவருக்கு சொந்தமாக ரொரன்ரோவில் சொகுசு வீடு உள்ளது. இது 5 படுக்கையறைகள் மற்றும் 3 குளியலறைகள் கொண்டதாகும்.

ரொரன்ரோவின் சீட்டன் கிராமத்தில் அமைந்துள்ள இந்த வீட்டை விற்க பீட்டர்சன்

C2 ▶







# கனடாவில் ஆற்றில் விழுந்த இந்திய இளைஞர் உயிரிழப்பு

கனடாவில், ஆற்றில் விழுந்த பந்தை எடுக்க முயன்று உயிரிழந்த இந்திய இளைஞரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 6ஆம் திகதி மாலை, பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள Kamloops நகரில், இந்தியாவின் பஞ்சாபைச் சேர்ந்த ஜதின் (வயது 27) தாம்ஸன் நதிக்கு அருகே பந்து விளையாடிக் கொண்டிருந்திருக்கிறார்.

அப்போது பந்து ஆற்றில் விழ, பந்தை எடுக்க முயன்ற ஜதினை ஆற்று வெள்ளம் அடித்துச் சென்றுள்ளது. அவரைக் கண்டுபிடிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.

இந்நிலையில், நேற்று, McArthur தீவுக்கருகே ஜதினுடைய சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் அவரது குடும்பத்தினருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவரது உடலை இந்தியாவுக்குக் கொண்டு செல்லும் முயற்சிகள் துவக்கப்பட்டுள்ளன.

ஒரு நல்ல எதிர்காலத்துக்காக கனடாவுக்கு கல்வி கற்க வந்த தங்கள் பிள்ளை சடலமாக ஊர் திரும்புவதை அறிந்து அவரது குடும்பத்தினர் துயரத்தில் ஆழ்ந்துள்ளனர்.

**சொகுசு வீட்டை...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

முடிவு செய்துள்ளார்.

இதற்காக சந்தையில் வைத்துள்ள அவர், அதன் விலையை 2.2 மில்லியன் டொலர்களுக்கு பட்டியலிட்டுள்ளார்.

ஜோர்டான் பீட்டர்சன், டாமி ராபர்ட்ஸின் மகளான ஃபுல்லர், தனது பெற்றோர் அரிஸோனாவில் உள்ள பாரடைஸ் பள்ளத்தாக்குக்கு மீண்டும் இடம் பெயர்ந்து வருவதாக தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், “அவர்கள் செய்யும் சுற்றுப்பயணத்தால், அவர்கள் இனி ரொரன்ரோவில் இருக்கப்போவதில்லை. மேலும் வீட்டை வைத்திருப்பதில் அர்த்தமில்லை.” என்றார்.






# கனடாவில் இரண்டு முதியவர்களின் வாழ்க்கையை மாற்றிய லொட்டரி

கனடாவில், இரண்டு முதியவர்கள் வாங்கிய லொட்டரிச்சீட்டு அவர்களின் வாழ்க்கையை முழுமையாக மாற்றியுள்ளது.

கனடாவின் கியூபெக்கில் வாழும் வெவ்வேறு குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு பேருக்கு லொட்டரியில் பெரும் தொகை பரிசாக கிடைத்துள்ளது.

Montérégieயில் வாழும் Jacques Deschamps மற்றும் மொன்றியலில் வாழும் Wilhelmina Van Leeuwen ஆகிய இருவருக்கே இந்த லொட்டரிச்சீட்டில் பணம் கிடைத்துள்ளது.

அதாவது, அவர்கள் இருவருமே 70 மில்லியன் டொலர்கள் பரிசு விழுந்த பரிசுச்சீட்டை வாங்கியுள்ளதால், அவர்கள் இருவருக்கும் ஆளுக்கு 35 மில்லியன் டொலர்கள் கையில் கிடைக்க உள்ளது.

Jacques, தனது 60 வயதில் இருக்கிறார். சொந்தமாக கட்டுமானப்பணி நிறுவனம் ஒன்றை நடத்திவருகிறார்.

லொட்டரியில் பரிசு விழுந்ததைத் தொடர்ந்து, அவர் தனது பணியிலிருந்து ஓய்வு பெற முடிவு செய்துள்ளார். தனது நிறுவனத்தை தனது மகனிடம் ஒப்படைக்க உள்ளார் Jacques.

Wilhelminaவோ தனது 70 வயதுகளில் இருக்கிறார். அவர் நெதர்லாந்தைச் சேர்ந்தவர்.

# ஒரு டொலரின் மூலம் கிடைத்த ஒரு லட்சம் டொலர் அதிஸ்டம்




கிங்ஸ்டன் பகுதியில் வசிக்கும் 76 வயதான ஓய்வுபெற்ற லிண்டா கோயில் என்ற பெண், ஒரு டொலர் லாட்டோ மேக்ஸ் என்கோர் லொத்தர் சீட்டு மூலம் ஒரு லட்சம் டொலர் பணப் பரிசு வென்றுள்ளார்.

ஒன்டாரியோ லாட்டரி மற்றும் கேமிங் கழகம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

சட்ட ரீதியாக வயது வந்தவர் என்ற வயதெல்லையை அடைந்த நாள் முதல் தாம் லொத்தர் சீட்டிலுப்புக்களில் பங்கேற்று வருவதாகவும் இதுவே முதல் வெற்றி எனவும் லிண்டா தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு வாரமும் லொத்தர் சீட்டுக்கள் கொள்வனவு செய்வதனை வழமையாகக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

லொத்தர் சீட்டில் வென்னெடுக்கப்பட்ட பரிசுத் தொகை தொடர்பில் தாம் நம்பிக்கை ஏற்படவில்லை எனவும் பல தடவைகள் விழுந்த தொகையை சரி பார்த்ததாகவும் தெரிவித்துள்ளார்.

பரிசு வென்றமை தொடர்பில் கூறிய போது எவரும் அதனை நம்பவில்லை எனவும் இதனை நகைச்சுவையாக முதலில் அனைவரும் எடுத்துக் கொண்டனர் எனவும் ஆனால் உண்மையென்று உணர்ந்ததும், அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர் என தனது குடும்பத்தவர்கள் பற்றி தெரிவித்துள்ளார்.

இந்த பரிசுத் தொகையை, வீட்டில் பழுது பார்க்க, மக்களுடன் பகிர்ந்து கொள்ள, மேலும் சிறிது தொகையை சேமிக்க, மற்றும் சிறிய விடுமுறைப் பயணத் திற்கும் பயன்படுத்த உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.